1370

மனிதர் யாவரும்

அறிந்து அநுஷ்டிப்பதற்கான

உபதேச பஞ்ச ரத்நம்.

(Know the Kingdom within you.)

OFFICE OF THE REGISTRAR OF ... No. 2- SEP 1929 MADRAS

பிரசுராலயம்:

வேத ப்ரவசன மந்திரம்

27, முத்து முதலி வீதி,

ராயப்பேட்டை, சென்னை.

ஸ்தாபகர்:

சதுர்வேதி - சிவத்தியாநாநந்த மஹர்ஷி

...TED AT
... PRINTING WORKS,
...DRAS CLUB,
...ADRAS.

RL
N29
176550

ஓம்

வேதப்ரவசன மந்திரம்,

27, முத்து முதலி வீதி, ராயப்பேட்டை,

சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
No.
2- SEP 1929

ஸ்தாபகர்,

சதுர்வேதி-சிவத்தியாநாநந்த மஹரிஷி.

1929.

THE UNIVERSAL PRINTING WORKS,
MADRAS.

181.48
176550

மொழி 1.

ஹிந்துக்கள் தினசரி செய்யவேண்டிய முதல் வேலை.

ஹிந்துக்களெல்லாரும் துவிஜரே. இதர சமூகங்களிலும் மதங்களிலும் பிறந்து இறந்து உழன்றவர்கள் இவ்வுலகத்துக் கடைசியாக ஹிந்துவாகித்தான் மோட்சமடைகிறார்கள். அவர்களெல்லாருக்கும் பெரிய மந்திரம் காயத்திரி. இதுவரையில் அம்மந்திரத்தை உங்கள் குருக்கண்மார் உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கவில்லையேல் இப்பொழுது அதனை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். மதத்துக்கும் ஜாதிக்கும் சம்பந்தமில்லை. மதம் உங்களது ஆத்மாவைத் தெய்வத்தோடு பொருத்துவது. ஜாதி வியவகார கற்பிதமாக ஏற்பட்டதென்று இந்து மதநூல்கள் முழங்குகின்றன. அதனால் ஜாதி உயர்வு தாழ்வு பேசுவோர் வார்த்தையைக்கேட்டு ஏமாறாதேயுங்கள். உங்கள் ஆத்ம உயர்வுக்காக அடியில் வரும் அநுஷ்டானத்தைத் தினமும் செய்யுங்கள். அப்படிச் செய்வீர்களானால் உங்களுக்கு ஆன்மபலம் விருத்தியாகும். இந்துக்களெல்லாருக்கும் காயத்திரி மஹா மந்திரம் பெரிய மந்திரமென்று சொன்னேன். அதில் இரண்டுவகை உண்டு. ஒன்று சங்க வித்தியாஸத்தால் வந்தது. மற்றொன்று அகச்சமய பேதத்தால் வந்தது. என்றாலும் முக்கியமானது அடியிற்கண்ட மந்திரம்தான். இது ரிக், யஜுர், ஸாமவேதங்கள் மூன்றிலும் உள்ளது.

R6
N29

எல்லாப் பெரியாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு அநுஷ்டிக்கப்படுவது. இம்மந்திரத்தைத் தினம் காலை மாலைகளில் பத்துத்தடவைக்குக் குறையாமல் ஜபஞ்செய்து கொண்டுவந்தால் ஒவ்வொருவருக்கும் இகத்தில் வாழ்வும் பரத்தில் மோட்சமும் சித்திக்கும். அது வருமாறு:—

“ஓம் தத் ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்.”

(சரியான உச்சரிப்புக்காக)

[Om tat savitur varenyam Bhargo Devasya Dheemahi Dhiyo yo na prachodayat.]

(இதற்குத் தமிழ்ச்செய்யுள்.)

எந் தியங்களை எற்ற முறநடத்
தந்த தேவனி ஞன ஸவிதுவா
மூந்த யாரும் மொழியும் பெருமைசால்
பந்த நீக்கொளிப் பர்க்கனைச் சிந்திப்பாம்.

[ரிக்வேதம் 3-வது மண்டலம் 62-வது சூக்தம் 10-வது செய்யுள். தமிழ் ரிக்வேதம் பார்க்க.]

(பொருள்.) ய: ந: திய: ப்ரசோதயாத் = யார் எங்களுடைய புத்திகளைத் தூண்டி விளக்குகின்றானோ-தத் வரேண்யம் ஸவிது: தேவஸ்ய பர்க்க: அந்த மகா சிறப்புவாய்ந்த ஸவிதாவும் (ஸூர்யனது ஆத்மாவும்) திவ்ய ஒளிவாய்ந்த பர்க்கனும் (அஞ்ஞானத்தை வறுப்

பவனும்) ஆன பரம்பொருளை—தீமஹி = தியானிப்போமாக. விளக்கவுரை:

மனம் வாக்குக் காயத்துக் கெட்டாத எந்த வஸ்து உலகப் பெரும் ஒளியாகிய ஸூர்யனுக்குள்ளும் ஆத்மாவாய், எங்கள் அறியாமையை முற்றும் ஒட்டுவதாய் திவ்ய வொளிவாய்ந்த தேவனாயுள்ளதோ, எங்களுடைய உலக வாழ்வுக்கும் மோட்சநிலைக்கும் வேண்டிய புத்திகளை அவ்வச்சமயங்களில் தூண்டிவிட்டுப் பிரகாசிப்பிக்கிறதோ, அந்த வஸ்துவை ஸதா தியானிப்போமாக.

இந்த ஜபத்தை மூலமந்திரமாகவாவது தமிழ்ச் செய்யுளாகவாவது அர்த்தம் மனதில் பதியுமாறு ஜபஞ்செய்பவர்கள் உத்தம துவிஜர்களாவார்கள். இப்படிச் செய்வதனால் மனிதர்களுக்குள் பேதமெல்லாம் ஒழிய எல்லாரும் கடவுளின் மக்களாய்ச் சகோதரர்களாக மாறிவிடுகிறார்கள்.

இதற்குமேல் இவ்விஷயமாக அதிகம் தெரிய விரும்பினால் மூன்றாவது மொழியைப் படித்துத் தெரிந்து கொள்க.

யாராவது கொள்கை மாறுட்டத்தினால் இம்மந்திரத்தைப் படித்து அப்பியசிப்பவர்களைத் தூஷித்தால் அவர்களோடு எதிர் பேசாமல் அவர்களைப் பதர்கள் என்று கருதிச் சும்மா செல்லவும். சுபம்! சுபம்!!

௨

வேதப்ரவசன மந்திரம்.

மொழி 2.

பிராணயாமம் (சுவாச நிறுப்பு).

யோகிகளுக்குப் பிதிர்கடன் வேண்டாம், பூணூலும் வேண்டாம். பின் வேண்டியது என்ன? சரீர பலமும் அதனால் வரும் மனோபலமும்தான் கட்டாயமாக வேண்டியது. சரீர பலம் பிராணயாமத்தால் வரும். மனோபலம் சரீர பலத்தினால் வரும். அதனால் பிராணயாமத்தைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

பிராணயாமம் என்றால் மூச்சைக் கட்டுவது என்பது பொருள். மூச்சு விடவேண்டிய வழியை அது உணர்த்தும். நமது வாழ்நாள் இம் மூச்சாலானது. ஒவ்வொருநாளும் 21,600 மூச்சு விடுகிறோம். இவ்விதமாக நிமிஷத்துக்கு 15 சுவாசம் விடுகிறதாகத் தெரியும். இதனை அதிகப்படுத்தினால் ஆயுள் குறையும். இச்சுவாசத்தை நிமிஷத்துக்கு இவ்வளவென்று குறைத்த அளவிற்கு ஆயுள் விருத்தியாகும். நிமிஷம் ஒன்றுக்கு 15 சுவாசம் விடுபவர் 120வருஷம் ஜீவிப்பார்களாயின் நிமிஷத்துக்கு ஐந்து சுவாசமே விடுபவர்கள் முந்நூற்றறுபது வருஷம் ஜீவிப்பார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆகவே மூச்சை நிறுத்துவிடுவதால் பலனுண்டு. அப்படி விடுவதற்குக் காயத்திரி உதவிசெய்யும். பிராணயாம காயத்திரியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. ஓம் புஹ ஓம் புவஹ ஓம் ஸுவஹ ஓம் மஹஹ
ஓம் ஜநஹ ஓம் தபஹ ஓம் ஸத்யம்;

இது எழு வ்யாஹ்ருதிகள் (7 வாக்கு உலகங்கள்).

2. ஓம் தத் ஸவிதுர் வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய
தீமஹி தியோ யோ ந ப்ரசோதயாத்;

இது சுத்த காயத்திரி.

3. ஓம் ஆபோ ஜ்யோதிரஸோ அம்ருதம் ப்ரஹ்மா
ஓம் பூர் புவஸ் ஸுவர் ஓம்.

இது காயத்திரி சிரஸ்.

(1) வியாஹ்ருதிகளைச் சொல்லி ஒரு நாசித் துவாரத்தை விரல்களால் அடைத்துக்கொண்டு சுவாஸத்தையுள்ளிழுக்கவும்.

(2) பிறகு இரண்டு நாசித் துவாரத்தையும் அடைத்துக்கொண்டு சுத்த காயத்திரியைத் தியானிக்கவும்.

(3) கடைசியாகக் காயத்திரி சிரஸைச் சொல்லிக் கையை எடுத்து வலது காதுக்கு அருகிற் கொண்டு போனபின், சுவாஸத்தை விடவும். இம்மாதிரியே நாசித்துவாரங்களை மாற்றி மாற்றி யப்பியசிக்கவும். இதனுல் பிராண பலமும் ஜடராக்கினியும் விருத்தியாகிறது. எப்பொழுதும் மூக்காலன்றி மூச்சுவிடலாகாது. இரவில் இந்த அப்பியாசத்தைச் சமமாக அவயவங்களை யமைத்து மல்லார்ந்து படுத்துக்கொண்டு படுக்கையிற் செய்துகொள்ளலாம். காலை மாலைகளில் உட்கார்ந்துகொண்டு செய்யலாம். நடக்குங் காலத்தி

லும் பகலில் இப்படியே செய்யலாம். மனத்துக்கு அதிகம் இடங்கொடுத்தல், கவலைப்படுதல், வாயால் மூச்சுவிடல், இரைக்க இரைக்க ஓடுதல், துக்கப்படல், அதிக ஸந்தோஷப்படல், அளவுக்கதிகமாக உண்ணுதல் இவற்றையெல்லாம் இவ்வப்பியாசத்தால் நிறுத்த வியலும். சுபம்! சுபம்!! சுபம்!!!

அஜபா (மௌன மந்திரம்).

(அசபை)

"சும்மா விரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே"

பிராணயாமத்தினல் சுவாஸம் ஒழுங்குபட்டது. வாயினுல் மூச்சுவிடவே கூடாது. சுவாஸம் விடுவதில்தான் மனிதனது செல்வமே யுள்ளது. அது மூன்று பகுதி கொண்டது. ஒன்று உள்ளிழுத்தல், இதனைப் பூரகம் என்பர். வலது நாசியை மூடிக்கொண்டு இடது நாசியால் வெளியிலுள்ள வாயுவை உள்ளிழுப்பதாம். இரண்டாவது, உள்ளிழுத்த வாயுவைச் சற்று நேரம் அடக்கி ஈரலில் பரவச்செய்தல். இதனைக் கும்பகம் என்பர். மூன்றுவது, உட்சென்ற காற்றை மறுபடியும் வெளிவிடல். இதனை ரேசகம் என்ப. இதற்கும் கால அளவுண்டு. ஒருதரம் கண்ணிமைக்கும் நேரம் ஒரு நொடிப்பொழுதாம். அது ஒரு மாத்திரையாகும். ரேசகம் (வெளிக்கழற்றல்) 32 மாத்திரை யளவினதாம். காற்றை வெளிக்கழற்

றின பின்னர் பூரகம் 16 மாத்திரை யளவினதாம். கும்பகம் 64 மாத்திரை யளவினதாம். கும்பகஞ் செய்யும்போதுதான் வெளியிலிருந்து உட்சென்ற வாயு இரத்த நரம்புகளுக்குள் செல்லுகிறது.

உடம்பிலுள்ள ரத்தமெல்லாம் ஒரு முறை ஈரல் குலைக்கு வந்து ஆகவேண்டும். அப்படி வரும்போது அவ்விரத்தம் உடம்பின் பல பாகங்களிலும் உள்ள கரி அல்லது அழுக்கைத் திரட்டிக்கொண்டு வருகிறது. நாம் உள்ளிழுத்த வாயுவில் பிராணவாயு முக்கியமான அம்சம். அப்பிராணவாயு ரத்தத்தில் கலந்ததும் கரியெல்லாம் அப்பிராணவாயுவோடு ஒன்றுபட்டுக் கரியமில வாயுவாக மாறுகிறது. அப்பொழுது சூடு ஏற்படும். அந்தச் சூடுதான் அஜபாநலம். அ—ஜப—அநலம் எனப் பிரிக்க. ஜபிக்காமல்வரும் நெருப்பு எப்பொழுது ரஸாயனக் கலப்பு ஏற்பட்டாலும் உஷ்ணம் ஏற்படும் என்பது ரஸாயன சாஸ்திரிகளது மதம். அதனால் கும்பகத்தில் சூடு ஏற்பட்டது. பின்னர் ரேசிக்கும்போது அதாவது மூச்சை வெளிவிடும் போது இக் கரியமிலவாயு வெளிப்போக ஈரலில் உள்ள ரத்தம் சுத்தமாய்விடுகிறது. இவ்விரத்தம் பின்னர் ரத்தநாளங்கள் வழியாய் மறுபடியும் உடல் முழுவதும் பரவுகிறது. இப்படிப் பிராணாயாமமானது ரத்த சுத்திக்கு மூலாதாரமாயிற்று.

இச் சுவாஸகிலையில் ஒரு மந்திரம் நாம் வாயினால் சொல்லாமலே ஜபிக்கிறதாக யோகிகள் கண்டறிந்திருக்கிறார்கள். அதற்கு அஜபாகாயத்திரி என்று

பேரிட்டிருக்கிறார்கள். வெளியிற்போகிற மூச்சு ஹம் என்ற சத்தத்தோடு போகிறது. உள்ளே வருகிற மூச்சு ஸஹ என்ற சப்தத்தோடு உள்வருகிறது. இதுவே ஹம்ஸ மந்திரம். இதனையே மாற்றிப் படித்தால் ஸோஹம் என்றாகும். ஸ: + அஹம் என்னும் இரண்டு பதங்களாலானது இது. அவன் நான் என்பது பொருள். ஹம் என்ற அஹம் அல்லது அகந்தை (அழுக்கு) கெட, ஸஹ அவன் என்ற பதி அல்லது தெய்வம் (தூய்மை) நம்முள் புகுகிறது என்ற பாவனை. வெளிச் சக்தியானது நமக்குள் புகுந்து நம்மால் ஒன்றுமில்லை எல்லாம் தன்னால்தான் என்று அறிவு கொளுத்தி விடவே நாம் அதன் மயமாக நிற்கிறோம். இவ்வளவும் வாயாலன்றி நாசியினாலேயே மூச்சுவிட்டு மௌனமாய் அறிந்ததால் இப்படிக் கானம்பண்ணின மந்திரம் அஜபா காயத்திரி என்று பெயர்பெற்றது. இதுவே இயற்கையாக நாம் மூச்சு விடுவதன் இரகசியம். எல்லாப் பிராணிகளும் இதனைச் செய்கின்றன. மனிதனும் இதனையே செய்கிறானாயினும் மனிதன் இம் மூச்சுவிடுவதின் தத்துவத்தையறிந்து அதனால் பரமேசுவரனோடு ஐக்கியப்பட்டு அவனது ஸர்வ சக்தியைச் சிறிது சிறிதாக நொடிதோறும் பெற்றுக்கொண்டே வருகிற விஷயத்தை அறிகிறான். அதனால் அவனுக்கு அநேக நூதனமான காரியங்கள் செய்யப் புத்தியுண்டாகிறது. சரீரத்தில் அக்கினி விருத்தியானவளவுக்குத் தேக திடமும், தேக திடம் விருத்தியான அளவுக்கு மனோ பலமும், மனோபலம் விருத்தியான அளவிற்கு புத்தி

தத்துவ விருத்தியும் ஏற்படுகிறது. அவன் அந்தப் புத்தியை ஈசுவர சைதன்யத்தோடு சேர்த்துப்பார்த்து அடிக்கடி பழகுவதால் அநேக ஸித்திகளும் அவனுக்கு உண்டாகின்றன. இதனால் பிராணாயாமம் எவ்வளவு பயனுடைத் தென்பதை யறியவும்.

அஜபா காயத்திரி 'ஹம்ஸஸ் ஸோஹம் ஹம்ஸோ ஹம்' என்று உபநிஷதங்கள் சொல்லுவதன் உண்மை இப்பொழுது தெரிந்திருக்கலாம். அது வாயினால் ஜபிக்காமல் மூக்கினால் மூச்சுவிடுவதிலிருந்தே மனத்தால் உணரப்படுவதால் அஜபா மந்திரம் அல்லது அஜபா காயத்திரி யென்னும் பெயர்பெற்றது. 'நான் அவன்; அவன் நான்; நான் அவன் நான்.' என்பது பொருள். இப்படி ஜபிக்காமலே சரீரத்திலுண்டாகிற அக்கினிக்கு அஜபா அநலம் அல்லது அஜபாநலம் என்னும் பெயராயிற்று. நாம் தேடிவைக்கும் உலகப் பொருள் பொருளல்ல. இவ் வஜபாநலமே பெரிய பொருள். அவ்வநலத்தைத் தெரிவிக்க ஸோஹம் பாவனையாகிய (அவன் நான் என்றும் கருதும் எண்ணமாகிய) மந்திரமே நமது மூச்சு. அம் மூச்சே செல்வமென்பதைத் தோற்றுவிக்கத்தான் 'மூச்சினைக் கட்டியே யோகபானுகாமல் மிக ஏழைக்குடும்பனாகித் தேடா தழிக்க மதி வந்ததென்கொலோ' என்றார் தாயுமானார். இவ்வளவும் கற்பிததனால் அம் மந்திரமும் அஜபா காயத்திரி எனப் பெயர் பெற்றது. சுபம்!

கன்மம்.

கன்மம் சரீரத்தை வளர்ப்பது, ஆன்மாவை வளர்ப்பது என இருவகையதாம். சரீரத்தை வளர்ப்பது தேகாப்பியாஸத்தோடு கூடிய தொழிலாம். இத்தொழில் பயனுள்ளதாக வில்லாவிடில் அதனைச் செய்வதிற் பிரயோஜனமில்லை. ஒரு தொழிலைச் செய்யும்போது அத்தொழில் பலவிதத்திலும் பயன் தருவதாகப் பார்த்து அத்தகைய தொழிலையே செய்யவேண்டும். பந்து அடிப்பதும் தோட்டம் பயிர்செய்வதும் தேகாப்பியாசங்களே. ஆனால் முன்னது உலக பயனைத் தராதது. பின்னது உலகபயனைத் தருவது. அதுபோலப் புத்தியை உபயோகித்துப் பல உபயோகமான தொழில்களைக் கைக்கொள்ளவேண்டும். இனி ஆன்ம சக்தியை வளர்ப்பதுவோ கல்வி, சாதனை என்னும் இருவகைப்படும். கல்வி சாதனம் அல்லது சாதிப்பதற்கேற்ற கருவி. கற்ற விஷயங்களை நமது வாழ்நாட் பழக்கத்திற் கொண்டுவருவது சாதனை. ஒரு விஷயம் தெரிந்திருந்தால் மாத்திரம்போதாது. சர்க்கரை தித்திக்குமென்றால் நாக்குக்கு இனிப்பு ஏற்படுமா? சர்க்கரையைத் தின்றுகவேண்டும். அதுபோல நல்லது செய்தல்வேண்டுமென்று மாத்திரம் தெரிந்திருந்தாற்போதாது. நல்ல காரியங்களைச்செய்து அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் ஆன்மலாபம் அடையலாம்.

சிலர் ஆன்மலாபத்துக்கான கருமங்களும் உலகப் பிரயோஜனமான கர்மங்களும் வேறுவேறாகக் கருது

வர். அது தவறு. உலக காரியங்களிலேயே நேர்மை, சத்தியம், மனச்சாட்சிக்கொத்த நடை, முதலியவற்றைக் கூட்டி ஆன்மலாபத்தை யடையலாம். அதனால் வைதிக லௌகிக கன்மங்களென இரண்டு இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு சிலருக்கு ஆன்மலாபத்துக்குத் தனிப்பட்ட கர்மங்கள் வேண்டுமெனத் தோன்றுகின்றதால் முதல்மொழியையும் இதனையும் கூறினோம். உலகத் தொழிலேயே தெய்வ பூசையாகக் கொள்பவர்கள் யோகிகள்; அவர்கள் மகா பெரியவர்கள்; அவர்களுக்குண்டாகும் லாபம், வைதிகம் லௌகிகம் எனப் பிரித்துப்பார்க்கும் பேத புத்தியாளர்க்குக் கிடைக்கும் லாபத்தைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகம். இரண்டையும் கூட்டி ஒன்றாக வுணர்பவருக்கு ஆக்கிரமில்லை; அலுப்பில்லை; அல்லலில்லை. ஆனதுபற்றி, யவர்கள் இகம் பரம் இரண்டையும் ஒருங்கே யடைவார்கள். நீங்களும் அப்படியே பழக முயலுங்கள். உலகத்து வேலை செய்யாமலே உண்ணவல்ல தனவந்தர்களுங்கூட இவ்விருவித கன்மங்களையும் ஒன்றுபடுத்திப் பார்க்கக் கற்றுக்கொள்வார்களாயின் சோம்பியிருக்கமாட்டார்கள். அவர்களது உழைப்பு உலக மேன்மைக்கு உபயோகமாகும். ஆதலால் யாரும் சோம்பியிருந்துவிடற்க. சுபம்! சுபம்!! சுபம்!!!

பு. கு.—நித்தியவிதி என்னும் நூலைப் படித்துப்பார்க்க.

The U. P. Works, Opp: Madras Club, Madras.

வேதப்ரவசன மந்திரம்.

மொழி 3.

பிராணுயாம காயத்திரியின் விரிவுரை.

சங்கராசாரியர் செய்தது.

இனி, எல்லாத் தேவர்களையும் தன்னிடத்துப் பெற்றதும், எல்லா வல்லமையையும் எல்லா ஒளியையுமுடைய தேஜோமயனது பரமாத்மாவைப்பெற்றதும், ஸர்வாத்மகத்தன்மையை விளக்குவதற்காக அந்த ஸர்வாத்மகத்தைப்பற்றிப் பேசுவதுமான காயத்திரி மகா மந்திரத்தின் உபாஸனக்கிரமம் விளக்கப்படுகிறது.

ஈண்டு பிரணவம் முதலிய ஸப்தவ்யாஹ்ருதிகளான ஓம் புஹ ஓம் புவஹ ஓம் ஸுவஹ ஓம் மஹஹ ஓம் ஜநஹ ஓம் தபஹ ஓ (கு) ம் ஸத்யம் என்னுந் தொடக்கத்தாய், ஓமாபோ ஜ்யோதி ரஸோ அம்ருதம் ப்ரஹ்ம ஓம் பூர் புவஸ்ஸுவரோம் என்னும் சிரஸ்ஸோடு கூடியதான காயத்திரியை ஸர்வ வேதஸாரமென்று சொல்லுகிறார்கள். இவ்விதச் சிறப்புவாய்ந்த காயத்திரி பிராணுயாமத்தினுல் உபாஸிக்கத்தக்கது. இதனுள் 'ஓம் பூர்புவஸ்ஸுவஹ ஓம் தத் ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோயோநப்ர சோதயாத்' என்பது ஜபஞ்செய்வதற்கானது. 'ஓம் தத் ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ நப்ரசோதயாத்' (உச்சரிப்பை முதல் மொழியிலுள்ள ஆங்கிலத்தோடு படித்துத் தெரிந்துகொள்க. இல்லாவிடில் வடநாட்டினர் பரிஹாஸம் செய்வர்)

என்பது சுத்த காயத்திரி. அது தனியாக ப்ரஹ்ம ஐக்கியத்தைப் போதிப்பது.

அதன் உரை வருமாறு:

பதச்சேதம்: தத் ஸவிதுஹ வரேண்யம் பர்க்கஹ தேவஸ்ய தீமஹி தியஹ யஹ நஹ ப்ரசோதயாத். நஹ=எங்களுடைய, தியஹ=புத்தியை, யஹ=யார், ப்ரசோதயாத்=தூண்டுகிறானே, என்று எல்லா புத்தியையும் குறிக்கும் அந்தக்கரணத்தைப் பிரகாசிப்பிக்கும் ஸர்வஸாட்சியான பிரத்யக் ஆத்மா சொல்லப்படுகிறது. தூண்டுகிறானென்றதனால் முடிவுகட்டப்பட்ட ஆத்மாவின் ஸ்வரூப பூதம் பரம்ப்ரஹ்மம் தத் ஸவிது: முதலிய பதங்களால் நிர்த்தாரிக்கப்படுகிறது. ஓம் தத் ஸத் என்று முடிவுகட்டப்பட்ட ப்ரஹ்மம் மூன்று விதமாகக் கருதத்தக்கது. தத் என்பதனால் தனி வஸ்துவும் ஸ்வதஸ் ஸித்தமுமான பரம்ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது. ஸவிதுஹ் என்றதனால் சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்னும் லட்சணங்களோடுகூடிய எல்லாப் பிரபஞ்சத்தினுடையவும் எல்லாத் தைவதப்ராந்தியினுடையவும் அதிஷ்டானம் (பற்றுக்கோடு) குறிக்கப்படுகிறது. வரேண்யம் என்றால் எல்லாவற்றிலும் சிறந்த நிரதிசயானந்தரூபம். பர்க்கஹ என்பதற்கு அவித்தையை வறுத்தழிக்கும் ஞானத்தோடுகூடிய தன்மை என்பது பொருள். தேவஸ்ய என்றால் எல்லாவற்றையும் விளக்கும் அகண்டாகாரமான (சித்) அறிவின் ரஸமென்று பொருள்படுகிறது. ஸவிதுர்தேவஸ்ய என்ற தொடர் ராகுவின் சிரமென்பதுபோலத் தற்கிழமைப் பொருளில்வந்த ஆறும் வேற்றுமை உபசாரப்பொருள

தாம். புத்தி முதலிய எல்லாவற்றையும் பார்க்கும் ஸாட்சி லட்சணங்கள் வாய்ந்த என் ஸ்வரூபமானது, எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடானதும், பரமாநந்த மானதும் எல்லாவற்றிற்கும் பொருள் உருவானதும் தன்னை விளக்கும் அறிவே ஆத்மாவாகவுள்ளதுமான பிரஹ்மமென்று, தீமஹி தியானிப்போமாக. 'இப்படி யாக பிரஹ்மத்தோடு தானே சுழலும் சடப்பிரபஞ்சத் தைக் 'கயிற்றுப்பாம்பு' என்னும் நியாயத்தினல் அப வாத ஒப்புமையாற் கடந்துநிற்பதாகிய ரூபம் ஒன்றே. (ஸோயம்) அவன் இவன் என்னும் நியாயப்படி ஸர்வ ஸாட்சிப்ரத்யக் ஆத்மாவானது பிரஹ்மத்தோடு தாதாத்மிய ரூபம் பெற்று ஒன்றுகிறது' என்று போ திக்கும் இந்த காயத்திரி மந்திரத்தின் பொருள் கிடைக்கிறது.

ஏழு வ்யாஹ்ருதிகளுக்கும் (சொல்லுலகங்களுக்கும்) இது பொருளாம். 1. பூஹ என்று ஸன்மாத்திரை யைச் சொல்லுகிறார்கள். 2. புவஹ என்று எல்லா வற்றையும் பிரகாசிப்பிப்பதாகிய சித்து உருவைக் கூறுகிறார்கள். 3. ஸுவஹ என்பதற்கு நன்றாக எல் லாராலும் சேர்ந்தெடுக்கப்படும் ஸுகரூபமென்ப. 4. மஹஹ என்று பெருமைப்படுத்தத்தக்க அல்லது பூஜிக்கத்தக்க ஸர்வ அதிசயத்துக்குப்பெயர். 5. ஜநஹ பிறப்பிப்பது என்று பொருள்பட்டு ஸகல காரணத்து வத்தைக் காட்டிநிற்கின்றது. 6. தபஹ என்பது ஸர்வ தேஜோரூபத்வம். 7. ஸத்யம் என்றால் எல்லா வாதையும் ஒழிந்த நிலையாம். "எது உலகத்து ஸத் தின் உருவமோ அது ஓங்காரத்தின் பொருளான

பிரஹ்மமே, ஆத்மாவும் அவனுடைய ஸத்து சித்துரூப மாதலின்" என்று பிரமாணம் ஒன்று உண்டு. அதனுல் 'புஹ் முதலிய எல்லா உலகங்களும் ஓங்கார வாச்சியமான பிரஹ்மத்தைத் தமது ஆத்மாவாகப் பெற்றவையாம். அதற்கு எதிரிடையாக ஒன்றுமேயில்லை' என்று வ்யாஹ்ருதிகளும் ஸர்வாத்மக ப்ரஹ்மத்தைப் போதிப்பவையாம்.

காயத்திரி சிரஸிற்கும் இதுவே பொருள்.
ஆப என்பது வியாபிப்பது என்னும் பொருளதாம்.
ஜ்யோதிஹி என்பது பிரகாச ரூபத்துவமாம்.
ரஸஹ என்பது ஸர்வ அதிசயித்வமாம்.
அம்ருதம் என்பது மரணம் முதலிய ஸம்ஸாரங்களிலிருந்து விடுபட்டதில்லை.

ஸர்வவியாபியும், ஸர்வப்ரகாசகனும், ஸர்வோத்க்ருஷ்டனும், நித்யமுக்தனுமான ஆத்மா ஸத்து சித்து ஆநந்தத்தோடுகூடிய ஓங்கார (வாச்சியமாகிய)ப் பொருளாகிய பிரஹ்மமே. அதுவே நானுகவிருக்கிறேன், என்று காயத்திரி மந்திரத்தின் முடிந்த பொருளாம்.

Guhaasayabrahma hutaasanoham
Kartredamamsakhya havirhutamsat !
Vileeyatenedamaham bhavaneet
Eshaprakaarastu vibhidyatetra !!
Yadasti yadbhaati tadaatmaroopam
Naanyattatobhati nachaanyadasti !
Swabhaavasamvitpravibhaatikevalaa
Graahyamgraheeteti mrshaivakalpanaa !!

என்று சங்கரபாஷ்யம் முற்றுப்பெறுகிறது.

வேதப்ரவசன மந்திரம்.

மொழி 4.

குண்டலினி சக்தி.

ஆகாரம் உடலை வளர்க்கும் வழியை உணருவது எவ்வளவு அவசியமோ (இவ்விஷயத்தைத் 'தெய்வ நெறி' என்னும் நூலிற் காண்க.) அவ்வளவு சுவாஸம் அன்ன ஸாரமாகிய இரத்தத்தைச் சுத்திசெய்யும் வழியை உணர்வதும் அவசியமாம். அதுபோலவே நாடிகளின் தன்மையை உணர்வது உடற்பாதுகாப்புக்கும் ஆன்ம உயர்வுக்கும் அவசியமாகும்.

நாடிகள் வெளியுணர்ச்சிகளை யுள்ளுக்கும் உள்ளுக்தரவுகளை வெளி யிந்திரியங்களுக்கும் கொண்டு செல்வன. இவை 72,000த்துச்கு மேலும் என்ப. இவற்றுள் 10 நாடிகள் முக்கியமானவை. இவை தவிர்த்து மூன்று நாடிகள் பின்னும் முக்கியமானவை. அவை இடை, பிங்கலை, சுஷும்நா என்பனவாம். இம் மூன்றும் மூலாதாரத்தினின்று தொடங்குகின்றன. இடை பிங்கலை மேரு தண்டமாகிய முதுகெலும்புத் தண்டுக்கு இருபுறத்திலும் கத்திரிபோலச் சுற்றிச்செல்ல சுழுமுனை (ஸுஷும்நா) நாடி மேருதண்டத் தொளை நடுவூடு நேராக ஆக்ஞைவரையில் செல்லுகிறது. இச் சுழுமுனை மூன்று புரைகளுள்ளது. அக்கினிஸ்வரூபமான சுஷும்நா வெளிப்புரை. சூரியஸ்வரூபமான வஜ்ரா நடுப்புரை. சந்திரஸ்வரூபமான சித்ரிணீ உட்

புரை. இச் சித்ரிணீ வழியாகத்தான் பிரமநாடி செல்கிறது. மேற்சொன்ன இடா அல்லது இடைகலை கங்கையும், பிங்கலை யமுனையும், ஸுஷும்னா ஸரஸ்வதியும் ஆகும் இம் மூன்றும் யுக்தத் திரிவேணியாக மூலாதாரத்தில் தொடங்கும். ஆக்ஞையில் ஒன்று கூடின பின்னர் விடுதலைபெற்று முக்தத் திரிவேணியாய் இடையும் பிங்கலையும் நாசித் துவாரத்திற்குவரும்; சுழுமுனை ஸஹஸ்ராரம் வரையிற் பின்னேக்காகச் சென்று ஒடுங்கிவிடும். இந்த ஸஹஸ்ராரமே சந்திரகளா மண்டலம்; தலையுச்சியிலுள்ளது. அதற்குப் பிரமரந்திரத்துவாரா செல்லவேண்டும். இச்சஹஸ்ராரத்தையே மந்திர சாஸ்திரிகள் நாற்பத்து முக்கோண சக்கரத்தாற் குறித்துக் காட்டினர். அதன் மத்தியிலுள்ள பிந்துவே இறைவனும் சக்தியும் கூடிநிற்கும் இடம்.

மேற்சொன்ன பல நாடிகள் முக்கியமாகப் பல இடங்களில் கிழங்குபோலக் குழுமி ஆதாரமடைந்து நிற்கும். பல இடங்கள் உளவேனும் அவற்றுள் ஆறு இடங்களை முக்கியமாகக் கண்டுளர் யோகிகள். அவற்றின் பெயர்களையும் தன்மைகளையும் சுருக்கமாக விவரிப்போம்.

(மு கு.) அடியிற்கண்ட விவரப்பட்டியிலுள்ள விஷயங்களில் பல நாம் அறிந்தபின் மறக்கவேண்டிய குழூஉக்குறிக ளென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்க.

மூலாதாரமும் சுவாதிஷ்டானமும் அக்கினி கண்டம் அல்லது அக்கினி மண்டலமாம். ருத்ரக்கிரந்தியுள்ள இடம். இக்கண்டத்தில் குண்டலினி சக்தியை எழுப்புவதில் பயனில்லை. அதனைச் செய்வன மிருகங்களும் ஜாரா விபசாரிகளுமாம். மணிபூரகமும் அநாஹதமும் சூரிய கண்டம். விஷ்ணுக் கிரந்தியுள்ள இடம். மூலாதாரத்திலுள்ள லிங்கத்தில் மூன்று சுற்றாக வாலைச் சுற்றிக்கொண்டு நிற்கும் குண்டலியின் தலையுள்ள இடம் மணிபூரகமே. இங்கிருந்து இக்குண்டலினியை எழுப்பித்தான் பிரமரந்திரத்தைத் துளைத்துக்கொண்டு ஸஹஸ்ராரத்துக்கு ஸுஷும்நா நாடி வழியாகப் போகுமாறு செய்வர் யோகிகள். அவர்களுக்கு விஷயங்களாகிய நெருப்பாறும் அவ்விஷய வுணர்வாகிய மயிர்ப்பாலமும் லக்ஷியமில்லை. விசுத்தியும் ஆக்ஞையும் சந்திரகண்டம். பிரஹ்மக் கிரந்தி உள்ள இடம். இம்மூன்று கிரந்திகளையும் அவ்வவ்விடங்களில் தியான தாரணைகளினால் அவிழ்த்துவிடுவர். ஒவ்வொருவரும் இப்படியே செய்யவேண்டும். இல்லாவிடில் காலனுக்கு இம் முடிச்சுகளை யறுத்தெறியும் வேலை ஏற்படும் என அறிக. இச்சாதனையைச் செய்யாததனால் தான் விபரீத வியாதிகளும் மரணத்துன்பமும் உண்டாகின்றன.

இவ் வாறு ஆதாரங்களுக்குமேல் ஸஹஸ்ராரத்தை யடையும் முன் இடையே மனோமண்டலமும் சந்திர மண்டலமும் உண்டு. ஸஹஸ்ராரமே சந்திரகளா மண்டலம். இங்குள்ள சந்திரன் என்றும் பூரணமா

ஷட் சக்ர நிரூபணப்படி

பெயர்.	1. மூலாதாரம்.	2. சுவாதிஷ்டானம்.
தேகத்திலுள்ள இடமும் பெயரும்	குய்யக்கீழ் Pelvic Plexus	குய்யத்துக்குமேல் Hypogastric Plexus
எழுத்துக்களையும் பாசங்களையும் குறிக்கும் இதழ் கள்	4	6
நிறம்	மஞ்சள்	வெள்ளை
தத்துவமும், தன்மாத்திரையும்	பிருதிவி வாசனை	அப்பு ருசி சுருக்கம்
கோண உருவம்	நாற்கோணம்	பிறை
தியான பீஜமும் வாஹனமும்	லம் ஐராவதமேல்	வம் சுறுமீன்மேல்
தேவதையும் வாஹனமும்	பிரமன், அன்னம்	விஷ்ணு, கருடன்
சக்தி	டாகினி	ராகினி
லிங்கமும் யோனியும்	ஸ்வயம்பு லிங்கம் திரிபுர திரிகோண யோனி	...
கரையும் தத்வம்	கந்தம்	ரஸம்
இயங்கும் உறுப்பு	பாதம்	கைகள்
கிரணம்	56	62

ஆறு ஆதார நிலைகள்

3. மணிபூரகம்.	4. அநாஹதம்.	5. விசுத்தி.	6. ஆக்ஞா.
கொப்பூழ் எதிரில்	இதயத்திக்கு நேர்	தொண்டைக் கெதிர்	புருவ நடுவுக்கு எதிர்
Solar Plexus	Cardiac Plexus	Pharyngeal Plexus	Plexus of Command or Ciliary Plexus
10	12	16	2
சிவப்பு	புகை	வெள்ளை	வெள்ளை
தேயு, உருவம், நிறம், உஷ்ணம், விரிவு	வாயு, ஸ்பர்சம், இயக்கம்	ஆகாசம், இடந் தரல், கேட்டல்	மனம், கரண சேஷ்டைகள்
முக்கோணம்	அறுகோணம்	வட்டம்	வட்டம்
ரம்	யம்	வம்	ஓம்
ஆட்டின்மேல்	மான்மேல்	வெள்ளையானை	
ருத்ரன் இடபம்	ஈசன்	சதாசிவம்	சம்பு
லாகினி	காகினி	சாகினி	ஹாகினி
...	பாணலிங்கம் திரிகோண யோனி		இதர லிங்கம் திரிகோண யோனி
ரூபம்	ஸ்பர்சம்	சப்தம்	மகத்தத்வம்
குதம்	குஹ்யம்	வாய்	மூலப்ரகிருதி
52	54	72	64

யுள்ளது. மனோமண்டலத்தில்தான் புத்தி, சித்தம், அகங்காரம் என்பன வேலை செய்வன. ஸஹஸ்ராரம் 1000 இதழ்களோடு கூடியது. மேற்சொன்ன ஆறு தாரங்களுக்குமுள்ள 50 இதழ்களும் இருபது மடங்கு பட்டுள்ளன. ஸஹஸ்ராரத்தின் கீழெல்லாம் புத்தியினது ஓட்டம். ஸஹஸ்ராரத்தில்தான் ஸித்தியினது ஆட்டம். இருவினையொப்பையும் மல பரிபாகத்தையும் அடைந்தவர்கள், உடலோடு தோன்றிய புத்தியென்னும் சக்தியையும் ஸஹஸ்ரார ஞானத்தில் முளைத்த ஸித்தியெனும் சக்தியையும் இரு மனைவிகள் போலப் பெற்று உலகவியலும், அருள்ஞானமும் ஒத்து நடப்பதற்கு வேண்டிய நிலையைப் பெறுவர். மூலாதாரம்முதல் ஆக்ஞைவரையில் நாடிகள் உன்முகமாக உடலை யியக்கு நோக்கத்தோடும் உலக வியலை நடத்தும் முன் நோக்கோடும் ஒழுகுபவை. ஆக்ஞைக்குமேல் ஸஹஸ்ராரம்வரையிற் செல்லும் சுழுமுனை நாடி பின்னோக்காக ஸஹஸ்ராரம்வரை செல்லுவது. மனிதனே சிறிய பிரஹ்மாண்டம். இங்குள்ளது அண்டத்துமுள்ளது. இங்கு இல்லாதது அங்கும் இல்லை. அதனாலேயே மனிதன் தன்னைத்தான் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிற்று. குண்டலினி ஜோதிர்மயி என்றும் மந்த்ரமயி என்றும் இரு வகையாகக் காணப்படுவள். இயம நியமாதி அஷ்டாங்க யோகங்களையும் அப்பியாசிக்கும் யோகிகளுக்கு அவள் ஜோதிர்மயியாக விளங்குவாள். அன்னார் பிரேத நிஷ்டைகூடி ஸஹஸ்ராரத்தில் மூலச்சுட்டை

யேற்றி அங்குள்ள அமுததத்தைப் புசித்துக்கொண்டு கருவி கரணங்களோய்ந்துகிடப்பர். இப்படிக் கிடப்ப வருக்கு உச்சியில்மாத்திரம் சூடிருக்கும். அதுகண்டு நெய் அல்லது வெண்ணெகொண்டு அன்னாது உடலைத் தேய்த்தால் அவர் மறுபடியும் ஜாக்கிரநிலைக்கு வருவார். இந்நிலை மனித சமூகத்தில் கூடுவதனால் உலகவர் விபரீதமாகக்கண்டு அன்னாது உடலை இறந்ததாகஎண்ணி எரித்துவிடவும் கூடுமாதலின், இச்சித்திக்கான குண்டலினி யெழுப்பும் செய்கையை ஜன சமூகத்தில் செய்யலாகாதென்றறிக. மந்த்ரமயியாகக் காணப்படும் குண்டலினித்தாயை ஸஹஸ்ரார அடையாளமாகவுள்ள நாற்பத்து முக்கோணத்தில் ஆவாஹநம்செய்து ஹ்ரீம் பீஜத்தால் தியானிப்பவர்களுக்கு அமிர்தப்பிரவாக ஸித்தி கிடைக்கும். இவரே, யாவதும் கற்றோர் அறியா அறிவாகிய ஸாக்ஷாத்கார ஞானத்தைப் பெற்றுக் கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையை யடைபவர். இவர்க்கே சில சமயங்களில் சக்தி பத்துவயதுள்ள கன்னியாகத் தரிசனம்கொடுப்பது. தரிசனம் காணும்போது, வாய்ச்சமர்த்துப் பேசாமல் மௌனநிலையில் ஊன்றி நின்று, அவள் தரும் வாமப்பாலைப் பருகுதல்வேண்டும். இப்படிப் பருகினோர் அருளையாள்வர். சுபம்! சுபம்!! சுபம்!!!

176550

வேதப்ரவசன மந்திரம்.

மொழி 5.

தக்ஷிணாமூர்த்தி தத்துவம்.

பிராணாயாமத்தினால் நாடியைச் சுத்திசெய்தோம். மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களின் தத்துவங்களை யறிந்து (மும்மண்டலங்களிலும் நமது கிள்ளாக்கு செல்லுமாறு) தியானத்தினால் உடல் முழுவதையும் நம் மிஷ்டப்படி நடக்குமாறு பண்படுத்திக் கொண்டதோடு, ஆக்ஞா சக்கரத்திலிருந்து மனோமண்டலத்துக்கு நமது நினைவுகளை யனுப்பி ஒவ்வோர் எண்ணத்தையும் சிந்தித்து ஆராய்ந்து தெய்வ விச்சையினோடு நமது ஆணவமும் ஒத்துநிற்குமாறு செய்து, நமது அகங்காரமே ஈசுவர சைதன்னியமாக விளங்குமாறு வினையொப்பு செய்துகொண்டோம் பின்னர் நம் செயலையும், நம்மறிவையும், நம் துணிவையும் இறைவனது செயலுக்குள்ளும் அறிவுக்குள்ளும் துணிவுக்குள்ளும் செலுத்தி நமக்கெனச் செயலும் எண்ணமும் துணிபும் ஒன்றும் தனியாகவில்லை என்னும் விதமாக மலபரிபாகத்தை யடைந்தோம். இவ்வளவுதூரம் குண்டலியினது உதவிகொண்டு, நமது சிரவுச்சியிலுள்ள அழியாப் புகழ்தரும் ஸஹஸ்ராரமாகிய சந்திரகளா மண்டலத்துக்குள் விளங்கும் சக்தியை யுணர்ந்து நமதுடல் முழுவதும் அமிர்தமயமான ஞானதாரைகள் தடையின்றிச் செல்லும் சத்திநிபாதத்தைப் பெற்றோம். இதனைப் பெற்றோமென்பதனோடு நின்று

விடாமல் ஒவ்வொருவருடைய சிரத்துக்கும் பன்னிரண் டங்குலத்துக்குமேல் விளங்கும் சத்திரூபமான (இறைவனது) பாதம் நமது சிரசில் பதியும்படி பார்க்க வேண்டியதும் அவசியமெனத் தென்பட்டது. இப் பாதத்தாடன்மே சக்தி பதிவு என்றாலும் பிழையாகாது. இப்பாதமானது இறைவனது காற்கூறு. இப் பாதத்தை நாம் நமது சிரசில் படக்கண்ட அப் பொழுதே நாம் பிரம மந்திரத்தை பேதித்து, ஸர்வாண்டங்களுக்கும் நாயகனாகிய கடவுளது சக்தியை நமது சிறு அண்டமாகிய உடலுக்குள் புகுத விட்டவர்களாவோம், நமக்கு உயிருள்ளபோதே கபால மோக்ஷம் கிடைத்துவிட்டது. பிறகு ஈசனது உருவம் நமது பிரதிபிம்ப ரூபமாகக் கண்ணிற்பட்டு நமது சிரத்தில் நிறகவும், பின்னர் உச்சித்துளையைப் பேதித்துக்கொண்டு பிரமரந்திரத்துவாரா அது நமது அநாஹத ஸ்தானமாகிய இருதயத்தில் புகவும், அங்குள்ள ஓரா யிரம் எண்ணங்கள் ரூபமாகத் தெரியும் ஆசாபாசப் பின்னல்களையறுத்து நெஞ்சை வெறுங் கூடுபோலாக்கிப் பூரணமாக அவ்விறைவன் அமாவதற்கு நமது நெஞ்சை யாசனமாக நாம் அவனுக்கு அளிக்கவும், பின்னர் ஆர்வமாகிய நீரால் அவ் விறைவனையாட்டி அன்பாகிய புஷ்பத்தை யவனுக்குச் சேர்த்து, அருளாகிய சந்தனத்தை யவன்மேற்பூசி, புத்தியாகிய தகளியில் உணர்வாகிய நெய்யையூற்றி உயிராகிய திரியை ஏற்றி ஞானமாகிய தீபத்தை யொளிரவிட்டுத் தத்துவங்களைப் புகைக்கும் தூபத்தைக் காட்டியும் பிராணு பானுதிகளாகிய நைவேத்தியத்தை யளித்தும் அவ

னது அருட்ஜோதியில் ஒடுங்கும் நீராஜனத்தை எடுத்தும் சதா அவனது ரூபமாகவே நாமும் நிறகவும், நமக்குள் அவனும் அவனுக்குள் நாமுமாக இரண்டறக் கலந்து விளங்கும் சதாநிஷ்டை கூடவும், அதனால் நமக்கு மரண நினைப்பு மாறவே யமனும் பகடுமேய்க்கியாய்த் திரிவதைக் காணவும் நமக்கு அவகாசம் ஏற்பட்டது. இத்தனையும் நமக்குப் போதித்த தத்துவமேதான் குருதத்துவம் அல்லது 'இவ்வுருவன் இப்படியன் இவ்வண்ணத்தன்' இன்னனென எவராலும் இயம்பவும் அறியவும் முடியாது நின்ற தட்சிணாமூர்த்தி தத்துவமாம். இத்தத்துவத்தை விளக்கவே, மூலக்கறிகுறியான கல்லால விருக்ஷத்தடியில், ஆக்ஞாசக்கரத்திற் கறிகுறியான (காசியில்) ஜாக்கிரநிலையில், கேவலச் செயல்களைச் செய்யவிரும்பும் அபஸ்மாரனைக் காலடியில் மிதித்துக்கொண்டு, போதத்தை முழுதுங் கவரும் காமமாகிய சித்தஜ அங்கஜனது செயல்களை நன்கறிந்து விஷய வின்பங்களில் தோன்றும் களிப்பாகிய ரதி ஆழுத் துயரெய்த மன்மதஸம்ஹாரஞ் செய்தலாகிய கிரியையை ஸனகாதி நால்வரும் தமது உலக அநுபவமும் நூலுணர்வும் ஒத்து நின்ற யோகவுணர்ச்சிகொண்டு உணர்ந்து ஞானத்தை யடைய, யோகினமர்ந்ததுபோலக் காட்டிய தோற்றத்தைக் கோவில்களில் அமைத்திருப்பதாம். இவ்வுண்மையை உணர்ந்த பின்னர் மண் கல் முதலியனகொண்டு செய்துள்ள கோவிலின் அவசியம் ஒருவற்கில்லையாகும். பிறகு அக்கோவிலினது தத்துவம் உணர்ந்த தன்மையால் அதனிடத்துள்ள விருப்பு வெறுப்புகள் மாற,

மனிதன் தனது சிந்தையே கோயிலாகப்போன தன்மையையும் தன் செயலே யவன்செயலாய்ப் போன தன்மையையும் ஸ்வாநுபூதியினால் உணர்கிறான். அதற்குமேல் ஏகாந்தமான இருதய குகைக்குள் வாழும் வாழ்வு அவனுக்கு ஜனமத்தியி லிருக்கும்போதும் ஏற்பட்டு விடுகிறது அவன்செய்யும் உலகத் தொழிலெல்லாம் பழக்க வாசனையால் செய்வதும், அவனது மனம் அத்தொழிலிற் பற்றற்று நில்லாததும் தெளிவாக அவனுக்குப் புலப்படுகிறது. இதுவே ஸஹஜ நிஷ்டை. இதனை யுணர்த்தின தேசிகனே தக்ஷிணாமூர்த்தி தத்துவம். இதனையறியாமல் இவ்வுலகத்து எந்தப் பிராணியும் தனது வாழ்க்கையை நடத்த முடியாதென்றால் மனிதனுக்குத் தனியாகச் சொல்லவும் வேண்டுமா? இதுவே இயற்கைத் தத்துவம். இதனை யுணரும்மட்டே ஒருவனுக்கு நூல்வேண்டும். இதனை யுணர்ந்த பின்னர் அவ்வகை யுணர்ந்த பெரியார் பலரொடும் அளவளாவி நிற்பதே சமயங்கடந்த மோன சமரசநிலை. இதனை விடுத்து விருப்பு வெறுப்புகளை உள்ளத்திற்பதித்து உடலிற்றோன்றும் முக்குணங்களும் தூண்டியபடியெல்லாம் பிதற்றித் திரிவது வீண் காலப்போக்கோடு பிறரைக் கெடுப்பதுமாகும். இதனை யருளாளர் எவரும்செய்யார். ஆனது பற்றி ஒவ்வொருவரும், தமக்குள் அமைந்து தமது பக்குவநிலையில் தமக்கே வெளியாகும் இத் தக்ஷிணாமூர்த்தி தத்துவத்தை அநுபவ வாயிலாக உணர்ந்து, எடுத்த தேகம் விழு முன்னே தாமடைந்த பிறவியின் பயனை அடைவார்களாக! சுபம்! சுபம்!! சுபம்!!!

முடிவுரை.

இந்துமதம் என்பது ஓர் அல்பெயராகும். எனினும் அது மனிதன் தோன்றிய காலந்தொட்டு ஏற்பட்டுள்ள வாழ்க்கை யுண்மைகளைத் தெரிவிக்கும் பொருளில் நிற்கிறது. அதனால் அது இதர மதங்களைப் போல அளவைகளால் நேர்படுத்தப்பெற்று தெய்வ ஸம்பத்திவாய்ந்த ஒரு அவதார புருஷனது வாயிலாகச் சொல்லப்பட்டு வழிவழிவந்த கொள்கைகளின் தொகைநூலா னதல்ல. ஆனால் சரீரம், பிராணன், ஆன்மா என்னும் முத்தத்துவமும் ஒன்றுபட்ட மனிதப் பிறவியின் சுபாவ தத்துவத்தை விளக்குவதாகும். மனிதன், சரீரமாகப், பசி, துயில், காமம், இவற்றின் மிகைகுறைகளால் வரும் பிணி, இவற்றை அனுபவிக்க வேண்டியவனாகிறான். அவனே பிராணனாக நின்று தன்னிடத்திலிருக்கும் தாழ்ந்த சக்திகளை உயர்ந்த பூமிகைகளுக்குக் கொண்டுபோய் அவற்றைத் தெய்வ சக்திகளாக மாற்றவேண்டியவனாகவு மிருக்கிறான். சாட்சி ரூபமாகவும், வழிகாட்டியாகவிருந்து ஜீவ சக்திகளை நடத்துகின்றதாகவும் மனிதனுக்குள் இருக்கிற தெய்வத் தன்மைக்கே ஆன்மா என்று பெயர். இவ்வான்மா, மெய்வாழ்க்கையின் தத்துவத்தை நன்குணர்ந்து அநுஷ்டித்து, அடிக்கடி தனது முதலாகிய பரமான்மாவோடு கலந்து பிறவிப் பயனாகிய

இன்பத்தையடைகிறது. இவ்வுண்மைவாழ்க்கைக்கு அநுகுணமாகவுள்ள எதுவும் தர்மமே. இத் தர்மத்தின் கோட்பாடுகள் என்றும் உள. அவற்றை மனிதன் அறிந்து கைக்கொள்ள வேண்டியவனுகிறுன். அதனுலேயே அவற்றின் சமுதாயத்துக்கு ஸநாதன தர்மம் என்று பெயர்வந்தது.

இவ்வறத்தை முற்றிலும் அறியப் பல காலங்களில் பல மதங்கள் முயன்றும் உண்மையை மறைக்கலாயின. என்றுலும் அவ்வுண்மை மறைவுபடாமல் இன்றும் ஒளிர்கிறது. ஒரு காலத்து அசுரமதமாகிய ஜாரதுஷ்டிரமும், தேவமதமாகிய ஆரியமும் இவ்வுண்மையறத்தை யறிய முயன்றன. இதுபோலவே பிராஹ்மண யூத மதங்களும், புத்த ஜைன மதங்களும், சைவ வைஷ்ணவங்களும், கிறிஸ்தவ இஸ்லாம் மதங்களும் முயன்று தவறிவிட்டன. தற்காலம் பிராஹ்மஞான ஸங்கம் முதலிய ஸங்கங்களும், ஆரிய பிரஹ்ம ஸமாஜங்களும் இவ்வுண்மையையறிய முயன்றும் தவறி நிற்கின்றன. இவற்றிற்குக் காரணம் இத் தர்மத்தின் உண்மை எல்லாவித ஸங்கேதங்களையும் கடந்து நிற்பதேயாம். ஆனுல் பிராணி சமூக முள்ளவரை இவ்வுண்மை நின்றே தீரும்.

அதனுல் மேற்கண்டபடி சுருக்கமாக அத்தர்மத்தை யுணருமாறும் அத்தர்மத்தை யுணர்த்தும் நூல்களைப் பார்ப்பதற்கு ஒரு தூண்டுதல் ஏற்படுமாறும் இவ்வைந்து மொழிகள் சொல்லப்பட்டன. இவற்றின் மேற்போந்த கோட்பாடுகள்யாவும் இவ்வுலகத்து மனி

தன் தனது தெய்வ வாழ்க்கையை யறியத் தடையாக நிற்கும் பொருளற்ற கொள்கைகளாம். இவற்றினும் அதிகமாக அறிய விரும்புவோரைப் பதஞ்சலி யோக சூத்திரம், தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரமும் மான ஸோல்லாஸமும், ஷட்சக்ர நிரூபணமென்னும் குண்டலினி சக்தி, கர்ப்போபநிஷத்து, ரிக்வேத ஸம்ஹிதை இவற்றைப் படித்துணருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

வேதப்ரவசனமந்திரம்,
22—7—29.

சிவத்தியாநாநந்த மஹர்ஷி.

R 6
N20
17655

பொருளடக்கம்

1. காயத்திரி
2. பிராணுயாமம்
3. காயத்திரியின் பொருள்
4. குண்டலினி சக்தி
5. தக்ஷிணுமூர்த்தி

முடிவுரை

அறிவிப்பு.

இரண்டணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு இந்நூல் அனுப்பப்பெறும்.

ஒரு ரூபாய் அனுப்புவோர் தபாற் செலவின்றிப் பத்துப் புஸ்தகம் பெறுவர்.

நூறு புத்தகங்கள் ஆறு ரூபாய்க்குத் தபாற் செலவின்றி அனுப்பப்பெறும்.

இவ்வுபதேசங்களை நேரில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மந்திரக் காரியதரிசிக்கு எழுதிக் கேட்பார்களாக.

வேத ப்ரவசன மந்திரம்,

27. முத்து முதலி வீதி,

ராயப்பேட்டை, சென்னை.